**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி**

**முன்னிலை– திரு. கி. ஆனந்த், எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி.

2026 ம் வருடம் பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

சி.ஆர். எம்பி எண்.1386/2025

**CNR. No. TNTT07-006224-2025**

காவல் உதவி ஆய்வாளர்,

கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்,

குற்ற எண்.109/2025 ..... புகார்தாரர்

/எதிர்/

சித்ராதேவி க.பெ. அன்புராஜ் --- நிகழ்நிலை புகார்தாரர்

இம்மனுவானது 12.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, நிகழ்நிலை புகார்தாரர் தானே முன்னிலை ஆகியும், புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து இது நாள்வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் பாதிக்கப்பட்டவர். நிகழ்நிலை புகார்தாரர் கொடுத்த புகார் மனுவின் பேரில் புகார்தாரர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கில் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது சம்பந்தமாக இந்நீதிமன்றத்திலிருந்து நிகழ்நிலை புகார்தாரருக்கு அறிவிப்பு அனுப்பியும் நிகழ்நிலை புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகிய பிறகு ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

3. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.02.12 20:33:39 +0530

4. எதிரி அசிங்கமாகப் பேசி, அடித்து, கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதற்கான போதிய முகாந்திரம் உள்ளதாலும், இறுதியறிக்கை தொடர்பாக நிகழ்நிலை புகார்தாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் இறுதியறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 1வது எதிரி மீது மேற்படி வழக்கானது BNS பிரிவுகள் 333, 296(பி), 115(2), 351(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act படியும், 2 முதல் 6வது எதிரிகள் மீது மேற்படி வழக்கானது BNS பிரிவுகள் 333, 296(பி), 115(2), 351(2) ஆண்டுப் பட்டிகை வழக்காக இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்படுகிறது.

**எனவே மேற்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது**.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.02.12 20:33:46 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
கோவில்பட்டி.